12th February 1958]

செய்யப்பட்டு மோசமாக ஆகிவிடக்கூடாது என்ற காரணத்தினுல் இவ் வேலைகள் உடனடியாகச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தொடர்ந்து அடுத்த வருஷ முடிவிற்குள் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : இட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் போடப்படுகிற திட்டங்கள் எல்லாம் அந்த அந்த வட்டாரம், தொகுதி எம்.எல்.ஏ.க்களைக் கலந்து கொண்டு போடப்படுகிறதா ? பணத்தையும் தொகுதி வாரியாகப் பிரித்து அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த அந்தப் பகுதி மக்கள் ஒத்துழைக்க எவ்வளவு தூரம் தயாராய் இருந்தார்களோ அவ் வளவு தூரம் பணமும் ஒதுக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது எல்லா இடங்களிலுமே உற்சாகம் ஏற்பட்டு எல்லோருமே பங்கு எடுத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறுர்கள். ஆகவே இப்போது ப்ளானிங் பாடியை கலந்து கொண்டு தாலூகா வாரியாகவே பணம் ஒதுக்கப்படுகிறது.

Cinema Theatres.

* 59 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state ; the number of (i) permanent and (ii) touring cinema theatres in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are 334 permanent cinemas and 353 touring cinemas in this State.

SRI P. G. MANICKAM : தலைவர் அவர்களே, சினிமாத் தியேட்டர்களில் பெண்களுக்கு திரையை ஒட்டி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தினுல் மின்விசையினுல் பெண்களுடைய கண்கள் கெட்டுப்போ கின்றன. ஆகவே பெண்களுக்குப் பாதுகாப்பான இடத்தில் பின்னுல் வசதியாக இடம் ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது அமுலில் இருக்கிற விதிப்படி பெண்களுக்கு தனியாக ஸ்தானம் ஒதுக்குவது இல்லை. ஏதோ வேண்டு மென்றுல் பின்னுல் இடம் இருக்கட்டும் என சினிமா தியேட்டர் சொந்தக்காரர்கள் வைத்திருக்கிறுர்களே தவிர பெண்கள் எங்கு சௌகரியமோ அங்கு உட்கார்ந்துகொள்ளலாம்.

Saraswathi Mahal Library, Tanjore.

* 60 *Q.*—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have taken any steps to publish the old valuable manuscripts in the Saraswathi Mahal Library at Tanjore; and

(*b*) if so, what they are?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Since 1948–49, the Government have been sanctioning grants for the publication of important manuscripts of the library. An Expert Committee appointed by the Government selects the manuscripts for publication. A sum of rupees one lakh was paid to the library during the period from 1948–49 to 1951–52 towards the publication of manuscripts. Since then, the Government have

[12th February 1958

paid a non-recurring grant of Rs. 21,000 for completing the publication of certain manuscripts. A recurring grant of Rs. 20,000 is also paid every year for publication of manuscripts of the library. The library has so far published about 66 manuscripts with the aid from Government.

Sri A. VEDARATHNAM PILLAI: அந்த நூல் நிலையத்தில் பிரசுரம் ஆகிற புத்தகங்களை மற்ற அரசாங்க லைப்ரரியில் வாங்கி வைப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்கிறதா? இல்லையானால் அதைப்பற்றி யோசிக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பது தான் என்னுடைய ஞாபகம். இல்லாது இருந்தால் அதைப் பற்றி கவனிக்கிறேன்.

Sri M. C. MUTHUKUMARASWAMI: சரஸ்வதி மகால் லைப்ரரியில் இருக்கும் நூல்கள் எத்தனை, அவை எதை எதைப் பற்றியது என்கிற விவரம் அடங்கிய லிஸ்டைத் தயார் செய்து அங்கத்தினர்களுக்குக் கொடுக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வார்களா? அதோடு வெளி நாட்டார் எடுத்துச் சென்ற நூல்களை மீண்டும் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: வெளிநாட்டார் எவ்வளவு நூல்களை எடுத்துச் சென்றார்கள், அவை இப்போது எங்கே இருக்கின்றன என்கிற தகவல் சர்க்காரிடத்தில் இல்லை. சரஸ்வதி மகாலில் எவ்வளவு நூல்கள் இருக்கின்றன என்பதைப் பற்றிய லிஸ்டு அவர்களிடத்தில் இருக்கும். அங்கத்தினர்கள் அதுவேண்டும் என்று விரும்பினால் வரவழைத்து அங்கத்தினர்களுக்குக் கொடுக்க முயற்சிக்கலாம்.

Sri K. ANBAZHAGAN: சரஸ்வதி மகாலில் உள்ள பழைய ஏட்டுச் சுவடிகளில் பிற நாடுகளில் காணப்படாத, காண முடியாத சித்த வைத்தியம் போன்ற விஷயங்களைக் கொண்ட சுவடிகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் உடனடியாக கவனித்துப் பிரிசுரித்து வெளியில் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: எல்லா நூல்களையும்—அதுவும் நமக்குப் பயன் அளிக்கும் நூல்களை எல்லாம்—உடனடியாகப் பிரசுரிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது.

Sri A. VEDARATHNAM PILLAI: அங்குள்ள பழைய சுவடிகளில் சில நீண்டகால சுவடிகள் ஆனதினால் அவைகள் கெட்டுப் போகின்ற நிலையில் இருக்கின்றன. அந்த மாதிரி ஜீரணம் ஆகக்கூடிய நிலைமையில் இருக்கிற சுவடிகளுக்கு முதல் சலுகையாக அவைகளைப் பிரசுரிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM: இதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் குழு இதை கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னொரு யோசனை கூட எனக்குத் தோன்றுகிறது. இதைப் போன்று இருக்கக்கூடிய பழைய சுவடிகளை நவீன முறையில் போட்டோ எடுத்துக் கொள்ளவும் முடியும். இதைப் பற்றியும் யோசனை செய்யலாம்.

Sri R. KRISHNASAMI NAIDU: தஞ்சை சரஸ்வதி மகால் லைப்ரரியில் புராதன வைத்திய சம்பந்தப்பட்ட நூல்களும், மாடு வாகனம் சம்பந்தமான பல மொழி பெயர்ப்பு நூல்களும் 1948–49-ம் வருஷத்திலேயே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புஸ்தகங்களை மலிவுப் பதிப்பாக அச்சிட்டு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: மக்களிடத்திலிருந்து அதை வாங்கும் சூழ்நிலை உண்டானால் அப்படிச் செய்யவும் ஏற்பாடு செய்யலாம், ஆனால் இவற்றைப் போன்ற வைத்திய புத்தகங்கள் ஆயிரக் கணக்கில், பத்தாயிரக் கணக்கில் விற்கும் என்று எதிர்ப்பார்ப்பது சரியல்ல என்று நான் நினைக்கிறேன்.